# DEPOSITION OF WITNESS
# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
# TIRUVANNAMALAI.

**S.C. NO. 39 /2021**

**24.01.2025. அ.சா.1 வெங்கடேசன், த/பெ. கந்தசாமி**

**Accused present.**

**எதிரிகள் தரப்பில் குவிமுச 311 மனு அனுமதிக்கப்பட்டு அ.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை-**

இறந்து போன என் அம்மாவும் நானும் தனித்தனி குடும்பமாகதான் இருந்தோம். தாயார் நிலத்தில் வேலை செய்தபோத நான் அவருக்கு உதவி செய்து கவனித்து வந்தேன். காணாமல் போன என் அம்மாவை ஊரில் தேடிப் பார்க்கவில்லை. பாண்டியனின் கிணற்றில் என் தாயாரின் சடலம் கவிழ்ந்த நிலையில் மிதந்து கொண்டிருந்தது. பிரேதத்தை பார்த்தபிறகு நான் மணியக்காரருக்கும் பின்னர் போலீசாருக்கும் தகவல் கொடுத்தேன். வி.ஏ.ஓ மற்றும் போலீசார் வந்த பிறகு தீயணைப்புத்துறையினர் இரவு சுமார் 10.00 மணிக்கு வந்தார்கள். போாலீசார் இரவு 8, 9 மணியளவில் வந்தார்கள். போலீசார் அங்கு என்னை விசாரிக்கவில்லை. இடத்தை மட்டும் பார்த்தார்கள். என் தாயாரின் சடலத்தை எடுத்தபிறகு போலீசார் என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை என் தாயார் சடலம் எடுத்தபோது நான் போடவில்லை. புகார் கொடுத்தபோது போட்டேன். புகாரில் உள்ள வாசகங்களை என் மாமா பையன் எழுதினார். புகாரில் உள்ள வாசகங்களுக்கும் என்னுடைய கையெழுத்திற்கும் நடுவே அதிக இடம் உள்ளது என்றால் சரிதான். கிணர் அருகே என்னிடம் போலீசார் 2 கையெழுத்து வாங்கினார்கள். நான் கொடுத்த புகாரில் என் தாயாரின் நகைகள் காணவில்லை என்று எந்த வாசகங்களும் இல்லை என்றால் சொல்லியுள்ளேன். கிணற்றருகே வந்து சுமார் ஒரு மணி நேரம் விசாரித்தார்கள். இரண்டு நாட்கள் கழித்து என்னை காவல் நிலையத்தில் விசாரித்தார்கள். போலீசார் எதிரியை தவிர மற்ற 4 நபர்களையும் சந்தேகத்தின் பேரில் விசாரித்தார்கள் என்றால் சரிதான். நான் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் போட்டுக் கொடுத்து அதை போலீசார் பூர்த்தி செய்து கொண்டார்கள் என்றால் நான் அதை மறுக்கிறேன். என் தாயாரின் நகைகள் உண்மையிலேயே காணாமல் போயிருந்தால் நான் புகாரில் அதைப்பற்றி சொல்லியிருப்பேன்

என்றால் புகாரில் சொல்லியுள்ளேன். வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-B.C.Gopinath
Additional District Judge,
Tiruvannamalai.

## DEPOSITION OF WITNESS
## IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.
## TIRUVANNAMALAI.

**S.C. NO. 39 /2021**

**24.01.2025. அ.சா.2 தேவராஜன், த/பெ. கந்தசாமி**

**Accused present.**

**எதிரிகள் தரப்பில் குவிமுச 311 மனு அனுமதிக்கப்பட்டு அ.சா.2 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை-**

இறந்து போனவர் என் அம்மா. புகார் கொடுத்தவர் என் சகோதரர். வி.ஏ.ஓ மற்றும் போலீசார் வந்த பிறகு தீயணைப்புத்துறையினர் இரவு சுமார் 10.00 மணிக்கு வந்தார்கள். என்னிடம் அந்த இடத்தில் போலீசார் எத்தனை கையெழுத்து வாங்கினார்கள் என்றால் என்னிடம் வாங்கவில்லை. அந்த இடத்தில் போலீசார் விசாரித்தார்களா என்றால் விசாரித்தார்கள். அதன் பின்னர் 3 நாட்கள் கழித்து விசாரித்தார்கள். நான் காவல் நிலையத்தில் ஒரு கையெழுத்து போட்டேன். போலீசார் விசாரித்தபோது என் அம்மாவின் நகைகள் காணாமல் போனதை பற்றி நான் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-B.C.Gopinath
Additional District Judge,
Tiruvannamalai.

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**

**TIRUVANNAMALAI.**

**S.C. NO. 39 /2021**

**24.01.2025. அ.சா.3 ஆனந்தன், த/பெ. முருகேசன்**

**Accused present.**

**எதிரிகள் தரப்பில் குவிமுச 311 மனு அனுமதிக்கப்பட்டு அ.சா.3 மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை-**

இறந்து போனவர் என் மாமியார். பிரேதத்தை பார்த்த அரை மணி நேரத்தில் போலீசார் வந்திருந்தார்கள். போலீசார் சுமார் 1 மணி நேரம் என்னையும் பொது மக்களையும் விசாரித்தார்கள். நான் கையெழுத்துப் போட்ட ஆவணங்களில் காவல் நிலையத்தில் வைத்து போட்டேன். என்னிடம் நகைகளை காட்டி போலீசார் விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கும் எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

Sd/-B.C.Gopinath
Additional District Judge,
Tiruvannamalai.